## 3.52. திரு ஆலவாய்

**பதிகக் குறிப்பு**: பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கப் பெற்று, உலகெலாம் உய்யுமாறு தோன்றிய திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் உடன்மேவ, ஆலவாய் அண்ணலின் திருமுன்னர் வணங்கி நின்று ஏத்தி அருளிய திருப்பதிகம்.

திருவிராகம்
பண் :கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

**1.**
**வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்**
**பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே**
**காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்**
**கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. 1**

**தெளிவுரை**: வீடு பேறு என்று சொல்லப்படும் முத்தி நலத்தை அன்றி வேறு அவா இல்லாத சிறப்புடைய பெருமக்கள், நின்னுடைய புகழ்ப் பாடலைப் பாடுகின்ற புகழின்கண் பரவி விளங்கும் பண்புடைய பெருமானே! சுடுகாட்டில் விரும்பி ஆடும் நாதனே! கபாலத்தைக் கையில் ஏந்திய ஈசனே! நீண்ட பெருமை உடைய மதில் விளங்கும் கூடலில் திகழும் ஆலவாய் என்னும் திருக்கோயிலில் மகிழ்ந்து நிலவும் திருக்கோலந்தான் என்னே!

**சிறப்புரை**: இத் திருப்பாட்டு, ஈசனின் அருள் வண்ணத்தை வியந்து போற்றுவதாயிற்று. வீடு பேறு நல்கும் திரு ஆலவாயிலானின் சிறப்பும், ஈசனின் இனிய திருக்கோலமும், இத் திருத்தலத்தின் சிறப்புப் பெயர்களாகிய பூலோக கயிலாயம், சிவராசதானி என்பனவற்றை நினைந்து ஏத்துதலாய் விளங்கிற்று. ஈசனைப் புகழ்ந்து பாடும் செம்மையானது, "பாடலால வாயிலாய்" எனப் போற்றப்பட்டது. இத்தன்மையினைத் திருநாவுக்கரசர், "மனத்தகத்தான் தலை மேலான் வாக்கின் உள்ளான், வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்" என அருளிச் செய்தமையும் காண்க.

ஈசன், திருஆலவாயில் மகிழ்ந்து குலவி மேவும் தன்மையால் அடியவர்களுக்கு அருளுதலை உணர்த்துமாறு, "குலாயதென்ன கொள்கையே" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம் நான் அணுகும் அம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே" என அருளிச் செய்தமை காண்க.

**பாடலாலவாயிலாய்** - பாடல் ஆல - வாயிலாய் (ஆலுதல் - இசைத்தல்).
**கபாலி** - பிரம கபாலம் ஏந்திய ஈசன். ஆலவாய் திருக்கோயிலின் மதில் என்பதும் ஆம். **கூடல்** - மதுரை.

================================================

2.
**பட்டிசைந்த அல்குலாள் பாவையாள் ஓர்பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாள்ஒ ருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூடல்ஆல வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியாய் இருந்தவாறுஇது என்னையே.   2**

**தெளிவுரை:** பட்டுப் போன்ற உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு அர்த்தநாரியாய் மேவும் பெருமானே! சடை முடியில் கங்கையாளை உச்சியாய்க் கொண்டு திகழும் நாதனே! கொடு கொட்டி என்னும் திருக்கூத்தினைப் புரியும் ஈசனே! கூடலில் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கும் பரமனே! அட்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமானே! தேவரீருடைய அருள் வண்ணம் பெருகி இருக்குமாறு மேவிய செம்மைதான் என்னே!

==================================================

3.
**குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்பம் என்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே.  3**

**தெளிவுரை:** ஈசனே! மன்னுயிர்களின்பால் தோன்றிப் பற்றி நிற்கும் குற்றமாகிய வினையும் நீவீர்! எப்பொருட்கும் இயல்பாய் இருந்து விளங்கும் குணமும் நீவீர்! கூடலில் திகழும் ஆலவாயிலில் வீற்றிருக்கும் ஈசனே! எனக்குச் சுற்றமாகி நின்று மேவுபவர் நீவிர்! தலைவன் நீவிர்! எப்பொருளுக்கும் அதன் விளக்கமாகவும் அவற்றால் பெறப்படும் இன்பமாக இருக்கும் மெய்ப் பொருளும் நீவிர்! நீவிரே முற்றுமாய் விளங்கி என்னை ஆழ்த்துபவர். அவ்வாறு இருக்க, நின்னைப் புகழ்ந்து உரைத்து முகமன் உரைப்பது என்பது எங்ஙனம்.!

**சிறப்புரை:** இத் திருப்பாட்டு வேதசாரமாய், யாவும் இறைவனே ஆகுதலை ஓதுவதாயிற்று. எங்கும் நிறைந்த இறைவன் சுற்றும் திகழ விளங்குபவன் எனக் காண்க. இந் நெறியில் திருநாவுக்கரசர்,

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
    அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
    ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
    துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
    இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

என அருளிச் செய்தமையும் காண்க.

ஈசனைப் போற்றிப் புகழ்தலானது, உள்ளவாறு திகழும் மெய்ம்மையே அன்றி முகமன் கூறும் வெற்றுப் புகழ்ச்சியாகாது என்பதனை, "புகழ்ந்து முன் உரைப்பது என்! முகமனே" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் ஈசன் புகழ்ச்சியைக் கடந்து விளங்குபவர் என்பதனை மாணிக்கவாசகர்,

"அருளுடைச் சுடரே, அளிந்ததோர் கனியே!
பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே!
பொருளுடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின் பொலிவே!
தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே சிவபெருமானே!
இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே!"
(பிடித்தபத்து 4) என ஓதி அருளிய செம்மை ஓர்க.

================================================

4.
**முதிருநீர்ச் சடைமுடி முதல்வன்நீ முழங்கழல்**
**அதிரவீசி யாடுவா யழகன்நீ புயங்கன்நீ**
**மதுரன்நீ மணாளன்நீ மதுரைஆல வாயிலாய்**
**சதுரன்நீ சதுர்முகன் கபாலம்ஏந்து சம்புவே. 4**

**தெளிவுரை**: ஈசனே! உயர்ந்ததாகவும் புனிதத் தன்மை உடையதாகவும் உடைய கங்கையைச் சடை முடியில் தரித்து விளங்கும் முதல்வன் நீவீர்! நெருப்பின் அனல் வீசி ஒலி எழுப்பக் கைகளை வீசி ஆடுகின்ற பாங்குடைய அழகன் நீவிர்! பாம்பினை அணிந்து விளங்கும் பெருமான் நீவிர்! மன்னுயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் இனியவர் நீவீர்! அழகிய மணவாளனாக விளங்குபவர் நீவிர்! மதுரையின்கண் ஆலவாயில் வீற்றிருக்கும் சிவபெருமானே! சதுரப்பாடு உடையவர் நீவீர்! பிரமதேவனின் கபாலத்தை ஏந்திச் சுகமளிக்கும் பரம்பொருளே! நின் கழலை ஏத்திப் போற்றுகின்றனம்.

**சிறப்புரை**: தம்பால் நீராடும் மாந்தரின் பாவங்களை நீக்கிப் புனிதமாக்கும் கங்கையின் சிறப்புச் சுட்டுமாறு, "முதிரு நீர்" என உணர்த்தப் பெற்றது. ஈசன் பாம்பினை அணிந்து மேவும் திருக்கோலத்தைப் "புயங்கன் நீ" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், "போற்றி போற்றி புயங்கப் பெருமான்" என மாணிக்கவாசகர் உரைத்தருளியதும் நோக்குக. ஈசனின் இயல்பான அருட் குணமாகி, உலகத்தைப் புரத்தல் செய்வதாகிய குணப் பேறாகக் கருதப்படும், மன்னுயிர்க்குச் சுகமளிக்கும் பான்மையினைச் "சம்புவே" என்று உரைக்கப் பெற்றது. இந்நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,
செம்பொன் மேனி வெண்ணீறணி வானைக்
கரிய கண்டனை மால்அயன் காணாச்
சம்புவைத் தழல் அங்கையி னானைச்
சாமவேத னைத்தன் னொப்பி லானை
-- திருநள்ளாறு திருப்பதிகம், பாடல் 1
என அருளிச் செய்த வாக்கும் நோக்குக.

**சதுரன்** - எல்லாம் வல்லவன்; பேரறிஞன்.

================================================

5

**கோலமாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்**
**பாலனாய தொண்டுசெய்து பண்டும்இன்றும் உன்னையே**
**நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்**
**சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே. 5**

**தெளிவுரை**: அழகு மிக்க நீண்ட மதில் கொண்ட கூடலில் விளங்கும் ஆலவாயிலில் வீற்றிருக்கும் பெருமானே! சண்டேசுவரர் பூசைத் தொண்டு புரிந்து உன்னையே போற்றி, யாண்டும் வழிபட மேவும் நீலகண்டனே! தேவர்கள் நின்னை அன்றி நித்தமும் சிந்தித்து வழிபடத் தக்கவராய் வேறு யார் இருக்கிறார்கள்!

**சிறப்புரை**: பாலனாய்த் திகழ்கின்ற காலத்தில்,சிவபூசை செய்யும் தொண்டு ஆற்றிய சண்டேஸ்வரரை இத் திருப்பாட்டு குறித்தது. இது மார்க்கண்டேயரைக் குறித்து உரைக்கப் பெற்றது என்றாலும் பொருந்தும்.

தேவர்கள் நாள்தொறும் ஈசனைப் போற்றி வழிபடுதலும், அவர்கள் ஈசனையன்றி வேறு தெய்வத்தைப் பூசிப்பது இல்லை என்பதும் இவண் சுட்டப் பெற்றது. "சிந்தையில் தேர்வதில்லை" என்ற தொடர்வாயிலாக உணர்த்தப் பெறும் தெளிவையும் உய்த்துணர்க. ஈசனே முழு முதற் பொருள் எனக்கொள்க.

**சீலம்** – குற்றம் ஓராது குணமே கொள்ளும் செம்மை.

==================================================

6.
**பொன்தயங்கு இலங்குஒளிந் நலங்குளிர்ந்த புன்சடை**
**பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலி**
**கொன்றையம் முடியினாய் கூடல்ஆல வாயிலாய்**
**நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே. 6**

**தெளிவுரை**: பொன்னின் ஒளி விளங்குகின்றதைப் போன்று, நலம் திகழும் குளிர்ந்த சடை முடியானது, ஒளிக் கதிர்கள் வீசுமாறு திரு நடம் புரியும் சிவபெருமானே! தோற்றம் பெறும் பிறப்பு என்னும் பான்மையில் மேவாத ஈசனே! திருமுடியில் பிரணவ புஷ்பமாகிய கொன்றை மலரைத் தரித்துள்ள பெருமானே! கூடல் பதியில் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கும் நாதனே! தேவரீருடைய ஒளிமயமாகிய திருநடனக் காட்சியினை நினைந்து ஏத்துதலே வழிபடுகின்ற பாங்குடைத்து அல்லவா!

**சிறப்புரை**: ஈசனின் திருக்கூத்தை நினைத்துப் போற்றுதல் அப்பெருமானை வழிபடுகின்ற பாங்காயிற்று என உரைக்கப் பெற்றது. இத் தன்மையில்,

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.
– உண்மை விளக்கம், பாடல் 36

என்னும் திருப்பாடலில் அருளிச் செய்தவாறு, முத்தி நான்ற மலர்ப்பதத்தை நாடி வணங்கும் செம்மையினை நன்கு உணர்த்துதலாயிற்று.

==================================================

7
**ஆதிஅந்தம் ஆயினாய் ஆலவாயில் அண்ணலே**
**சோதியந்தம் ஆயினாய் சோதியுள்ளொர் சோதியாய்**
**கீதம்வந்த வாய்மையால் கிளர்தருக்கி னார்க்கல்லால்**
**ஓதிவந்த வாய்மையால் உணர்ந்து ரைக்கலாகுமே. 7**

**தெளிவுரை:** ஆலவாய் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற அண்ணலே! ஆதியும் அந்தமுமாக இருப்பவர் நீவிர்; சோதியின் எல்லையாக விளங்குபவர் நீவிர்; பெருஞ் சோதிக்குள் சோதியாய் விளங்கி ஒளிரச் செய்பவர் நீவிர்; மெய்ஞ்ஞானமாகிய சிவஞானத்தால் விளங்கி மேம்படுவர்களுக்கேயன்றி, தேவரீரின் அருள் தன்மை யினை உணர்வதற்கும் உரைப்பதற்கும் கூடுமோ!

**தருக்குதல்** – மேம்படுதல்.

==================================================

8
**கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடல்**
**துறையிலங்கை மன்னனைத் தோளடர ஊன்றினாய்**
**மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்**
**நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே. 8**

**தெளிவுரை:** நீலகண்டத்தை உடைய பெருமானே! இலங்கையின் மன்னனாகிய இராவணனுடைய தோள் நெரியுமாறு கயிலை மலையால் ஊன்றிய தேவரீர், வேதத்தின் பாடலாக மேவி, மதுரையில் திகழும் ஆலவாய் என்னும் திருக்கோயிலில் வீற்றிருப்பவர். ஒருமித்த மனத்தினால் எண்ணித் துதிப்பதே தேவரீரை வழிபடுவதற்குரிய நியமம் ஆகும்.

==================================================

9
**தாவணவ் விடையினாய் தலைமையாக நாள்தொறும்**
**கோவணவ் வுடையினாய் கூடலால வாயிலாய்**
**தீவணம் மலர்மிசைத் திசைமுகனும் மாலுநின்**
**தூவணம் அளக்கிலார் துளக்கம் எய்துவார்களே. 9**

**தெளிவுரை:** தாவிச் செல்லும் இடப வாகனத்தை உடைய பெருமானே! கோவண ஆடையை முதன்மையாகக் கொண்டு விளங்கும் நாதனே! கூடலில் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கும் பரமனே! செந்தாமரை மலரில் திகழும் பிரமனும், திருமாலும் தேவரீரை அளந்து அறியும் தன்மை அற்றவராய் அயர்ச்சி அடைந்தனர் அல்லவா!

**சிறப்புரை:** வேதங்களே கோவணமாக உடைமையால் கோவண உடையே தலைமையாகக் கொள்ளும் உடையாயிற்று எனக் கொள்க.

**தாவணம்** – தாவும் வண்ணம்; **தீவண மலர்** – செந்தாமரை.

==================================================

10
**தேற்றமில் வினைத்தொழிற் றேரரும் சமணரும்**
**போற்றிசைத்து நின்கழல் புகழ்ந்துபுண் ணியங்கொளார்**
**கூற்றுதைத்த தாளினாய் கூடலால வாயிலாய்**
**நாற்றி சைக்கும்மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே. 10**

**தெளிவுரை**: தெளிந்த பயனை நல்காத செயலின்கண் மேவும் தேரர்களும் சமணர்களும் நின்னுடைய திருவடியை வணங்கிப் போற்றிப் புண்ணியத்தைக் கொள்ளாதவராயினர். கூற்றுவனை உதைத்த திருப்பாதனே! கூடலின் ஆலவாயின்கண் வீற்றிருக்கும் ஈசனே! உலக மூர்த்தியாய் நின்று விளங்கி, உயிர்களுக்கு எல்லா நன்மையும் தருபவர் நீவிரே அல்லவா!

**சிறப்புரை**: நான்கு திக்குகளுக்கும் இறைவனாகிய தன்மையில் ஈசன் திகழ்தலும், அவரே நன்மை விளைவிப்பதும் சுட்டப் பெற்றது. உலகத்தின் எழிலை நான்கு திக்குகள் என மொழிதல் ஆயிற்று. இதனை உலக நாதன் என்னும் திருநாமத்தின் சிறப்புக் கொண்டும் காண்க.

==================================================

11
**போயநீர் வளங்கொளும் பொருபுனல் புகலியான்**
**பாயகேள்வி ஞானசம் பந்தனல்ல பண்பினால்**
**ஆயசொல்லின் மாலைகொண்டு ஆலவாயில் அண்ணலைத்**
**தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே. 11**

**தெளிவுரை**: நீர் வளம் பெருகும் புகலியில், பரந்த கேள்வி ஞானம் மிக்க, வேதம் வல்ல ஞானசம்பந்தன் சிவபெருமானை ஏத்துதலாகிய நற்பண்பால் விளங்கும் சொல்மாலை கொண்டு ஆலவாய் அண்ணலை ஏத்திய இத்திருப்பதிகத்தை எண்ணத்தில் கொண்டும், சிந்தையில் பதித்தும் ஓதுபவர்கள், தீயவை யாவும் நீங்கப் பெற்றவராய் விளங்குவார்கள். அவர்கள், தேவர்களுக்கு ஒப்பாவார்கள்.

**பாயகேள்வி** – பரந்த கேள்வியால் வரும் வேதம்.

==================================================

திருச்சிற்றம்பலம்